**IN THE COURT OF THE PRESIDING OFFICER, LABOUR COURT, SALEM**

**C.P No. 20 / 2022**

**Deposition of PW1**

Name : குமார் Husband / Father's Name :

Village : Taluk :

Caste : Religion :

Age : Calling :

Deposition of witness for the Respondent solemnly affirmed by Thiru.M.Raju, Bench Clerk Grade-I of this court on 04.11.2022 in accordance with Provisions X of Evidence Act 1872.

**குறுக்கு விசாரணை**

30.04.2019 **தேதியில் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்திலிருந்து முதுநிலை பயணச்சீட்டு பரிசோதகராக பணி புரிந்து பணி ஓய்வு பெற்றேன் தற்போது எனக்கு** 5 **சதவீதம் அடிப்படையில் எதிர்மனுதாரர் போக்குவரத்துக்கழகம் அகவிலைப்படி வழ்கிவருகிறது என்றால் சரி.** 17 **சதவீதம் வரை அகவிலை படி வழங்ககோரி மனுதாக்கல் செய்துள்ளேன். என்னை போன்ற ஓய்வு பெற்ற பணியாளர்கள் யாருக்கும்** 5 **சதவீத அகவிலைப்டிக்கு மேல் ஓய்வூதியம் கணக்கீடு செய்து வழங்கப்படவில்லை என்றால் சரி. என்னுடைய மனுவில் நான் ஓய்வு பெற்ற போது பெற்ற அடிப்படை சம்பளம் ரூ** 48000 **குறிப்பிடப்பட்டுள்ளேன் என்றால் சரி தான். அது போல அடிப்படை சம்பளம் ரூ** 48000 **என்பதை காண்பிப்பதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ** 4 **பணிபதிவேட்டில் பக்கம்** 49 **ல் எனக்கு உண்டான அடிப்படை சம்பளம் ரூ** 45000 **என நிர்ணயம்**

செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். அது தான் கடைசியாக நான் ஒய்வு பெற்ற போது நிர்வாகத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை சம்பளம் என்றால் சரி. ரூ 3000 வித்யாசம் எந்த அடிப்படையில் கோரிகிறேன் என்றால் பணிப்பதிவேடு மற்றும் செட்டில்மெண்ட் அடிப்படையில் கோரிகிறேன். நான் கூறியுள்ள ரூ 48000 தான் அடிப்படை சம்பளம் என்பதை காண்பிதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை நிர்வாகம் ஒப்பந்தம் மற்றும் என்னுடைய பணி நிலை திறன் அடிப்படையில் என்னுடைய இறுதியான அடிப்படை சம்பளம் ரூ 48000 என்று நிர்ணயம் செய்துள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ 7 13 ஆவது ஊதிய ஒப்பந்த அடிப்படையில் என்னுடைய அடிப்படை சம்பளம் ரூ 48000 என்று கோருகிறேன் என்றால் சரி. மேற்படி ஒப்பந்ததின் படி முதுநிலை பயணச்சீட்டு பரிசோதகர் என்ற பணிநிலை திறனுக்கு வந்து விட்டதால் பணிஆய்வு பெறுவதற்கு எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. எனக்கு பணிஆய்வு பெறுவதற்கு தகுதியில்லை என்பதால்தான் என்னுடைய அடிப்படை சம்பளம் ரூ 45000 என்று நிர்ணயம் செய்துள்ளது என்றால் சரியல்ல. தமிழ்நாடு முழுவதும் யாருக்கும் 5 சதவீத படிக்கு மேல் வழுங்கப்படததால் நிர்வாகம் எனக்கு நான் கோரியுள்ள ஓய்வூதிய நிலுவை மற்றும் முன் கூட்டு நிலுவை தொகையை வழங்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

(Sd/-Tmt. S. Sumathy)
Presiding Officer,
Labour Court, Salem.